# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# DEVAKOTTAI
## CC.No.208/2025

Deposition of witness for Prosecution அ.சா.3

| | | |
|---|---|---|
| பெயர் | : | காந்தி பிச்சை |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | செல்லையா |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 05.05.2026

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சார்பு ஆய்வாளர் திரு.ஜெயபாலன் அவரையும் அவருடைய கையொப்பத்தையும் நன்கு தெரியும். அதனால் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 31.03.2025 ம் தேதி காலை 7.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் ஜெயபாலன் முதல்நிலைக்காவலர்கள் முத்துக்குமார், சந்திரசேகர் ஆகியோர்களுடன் குற்றத்தடுப்பு சம்பந்தமாக ரோந்து சென்றபோது உதையாட்சி அருகே சட்டவிரோதமாக மது விற்பதாக கிடைத்த தகவலின்பேரில்

சாக்குப்பையுடன் நின்ற ஒருவரை பிடித்து விசாரித்து அவரிடம் இருந்த 180 ml அளவுள்ள express brandy பாட்டில்கள் 7 கைப்பற்றி விசாரிக்க அவர் மதுபான கடையில் வாங்கி சட்டத்திற்கு புறம்பாக விற்பனைக்கு வைத்திருந்ததாக கூறியதன்பேரில் சம்பவ இடத்தில் மகஜர் தயார் செய்து முதல் நிலைக் காவலரிடம் கையொப்பம் பெற்றுள்ளார். பின்னர் எதிரியையும் வழக்கு சொத்துக்களையும் காவல் நிலையம் கொண்டு வந்து கு.எண்.119/2025, 4(1)(C) TNP Act ன்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் கைப்பற்றிய மது பாட்டில்களை 31.03.2025 ம் தேதி 10 மணிக்கு தேவகோட்டை தாலுகா காவல் நிலையம் பின்புறம் அழித்தல் மகஜர் தயார் செய்து மது பாட்டில்களை அழித்துள்ளார். **(மேற்படி அழித்தல் மகஜர் அ.சாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 4(1)(C) TNP Act ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

உதையாட்சி விளக்கு தேவகோட்டை நகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்டது என்றால் சரியல்ல, தாலுகா காவல் நிலையத்திற்கு உட்பட்டதுதான். உதையாட்சி விளக்கு அருகே 3 ரோடு சந்திக்கும் பைபாஸ் பகுதி தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். உதையாட்சி விளக்கிலிருந்து 1 km தூரத்தில் அரசு மதுபான கடை உள்ளது என்றால் தெரியாது. இந்த வழக்கில் நான் விசாரணை அதிகாரி கிடையாது. வழக்கு சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்போதும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யும்போதும் நான் இந்த காவல்

நிலையத்தில் இல்லை என்றால் சரிதான். தேவகோட்டை தாலுகா காவல் நிலையம் உதையாட்சி விளக்கிலிருந்து 1 km க்கு குறைவாகதான் இருக்கும் என்றால் இல்லை 1 km க்கு கூடுதலாக இருக்கும். உதையாட்சி விளக்கில் பெட்டிக்கடை, வெல்டிங்கடை மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மதுவிலக்கிற்கு என்று தனிபிரிவு சிவகங்கையில் உள்ளது என்றால் சரிதான். மாதம் மாதம் மதுவிலக்கு வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று அரசிடம் இருந்து உத்தரவு உள்ளது என்றால் இல்லை, மேல்அதிகாரிகள் சொல்லாமல் நாங்களாக பதிவு செய்வோம். வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றும் சார்பு ஆய்வாளருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை: இல்லை**</u>

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.